## FIRST MOCK EXAMINATION – JANUARY 2018

**Roll No.** | | | | | | | |

**Series XXX / 5**

**Code No. 006 / 1 / 1**

- Please check that this question paper contains 12 printed pages.
- Code number given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains 11 questions.
- Please write down the serial number of the question before attempting it.

**Tamil ( SL )**

Class : X

Time allowed : 3 hrs

Date : 16/01/2018

Max. Marks : 80

1. Attempt all the questions.
2. Number the answers properly

இக்கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது:

This question paper is divided into four sections:

| | | |
|---|---|---|
| பிரிவு அ<br>SECTION A | : படித்தல் (உரைநடைப்பகுதி)<br>: Reading Comprehension | 15 மதிப்பெண்கள்<br>15 Marks |
| பிரிவு ஆ<br>SECTION B | : எழுதுதல்<br>: Writing | 14 மதிப்பெண்கள்<br>14 Marks |
| பிரிவு இ<br>SECTION C | : இலக்கணம்<br>: Grammar | 15 மதிப்பெண்கள்<br>15 Marks |
| பிரிவு ஈ<br>SECTION D | : இலக்கியம்/தமிழ்ப் பாடநூல்கள்<br>: Literature / Text Books | 36 மதிப்பெண்கள்<br>36 Marks |

---

# பிரிவு - அ

## *படித்தல் - மதிப்பெண் : 15*

1. பின்வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும் :

*அ) பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி :* *5*

கூர்மையான நுண்ணறிவு கொண்டவர் சாலமன் என்பதனை அனைவரும் அறிவர். ஷீபா நாட்டு அரசி அவர் புகழைக் கேள்விப்பட்டாள். அவர் நுண்ணறிவைச் சோதிக்க விரும்பினாள். அவள் தன் வலக்கரத்தில் ஒன்றும் இடக்கரத்தில் ஒன்றுமாய் மாலையை வைத்துக்கொண்டு அவருக்குக் காண்பித்தாள். அந்த மாலைகளுள் ஒன்று இயற்கையான மலர்களால் தொடுக்கப்பட்டது; மற்றொன்று செயற்கையான மலர்களால் தொடுக்கப்பட்டது. அவற்றுள் எது இயற்கையான மலர்களால் தொடுக்கப்பட்ட மாலை என்று சாலமனை வினவினாள். சாலமன் சன்னல்களைத் திறக்குமாறு சொன்னார். தோட்டத்திலிருந்து தேனீக்கள் பறந்து வந்தன; அரசியின் வலக்கரத்தில் இருந்த மாலையில் தங்கின. அரசியின் வலக்கரத்தில் உள்ள மாலையே இயற்கையான மலர்களால் தொடுக்கப்பட்டது என்றும், இடக்கரத்தில் உள்ள மாலை செயற்கையான மலர்களால் தொடுக்கப்பட்டது என்றும் சாலமன் கூறினான். ஷீபா நாட்டு அரசி சாலமனின் அறிவாற்றலைப் புகழ்ந்தாள். அவர் உலகத்தில் உள்ள அனைவரைக் காட்டிலும் மிக ஞானமுள்ளவனாய்த் திகழப்பட்டார். பின் ஷீபா சாலமனுக்குத் தங்கம், வெள்ளி ஆகிய பரிசுகளை வழங்கினாள். அனைவரும் அவருடைய ஞானத்தைப் பார்த்து அவர் ஆளும் தேசம் மிகப் பாக்கியம் வாய்ந்தது எனக் கூறிச் சென்றார்கள்.

**வினாக்கள் :**

i. *சாலமன் எதைக் கொண்டவனாய் இருந்தார் ?*

அ) கூர்மையான புத்தி

ஆ) கூர்மையான நுண்ணறிவு

இ) கூர்மையான நுண்ணறிவு

ஈ) கூர்மையான பன்முக நுண்ணறிவு

ii. *ஷீபா அரசி ஏன் அங்கு வந்தார்கள் ?*

அ) நுண்ணறிவைச் சோதிக்க விரும்பி

ஆ) நுண்ணறிவைக் கண்டறிய விரும்பி

இ) நுண்ணறிவைக் காண விரும்பி

ஈ) நுண்ணறிவைப் பார்க்க விரும்பி

iii. *சாலமன் எந்தச் சோதனையில் வெற்றி பெற்றார் ?*

அ) இயற்கை, செயற்கை மலரின் மாலையைக் கண்டறியும்

ஆ) செயற்கை ரோசா மலரின் மாலையைக் கண்டறியும்

இ) இயற்கை மல்லிகை மலரின் மாலையைக் கண்டறியும்

ஈ) இயற்கை, செயற்கை வேற்றுமையைக் கண்டறியும்

iv. *சாலமன் எதைக் திறக்குமாறு சொன்னார் ?*

அ) கதவுகளை ஆ) சன்னல்களை இ) வாசற் கதவுகளை

ஈ) வாசற் தாழ்ப்பாளை

v. *ஷீபா அரசி மன்னருக்கு அளித்த பரிசென்ன ?*

அ) பொன், வெள்ளி ஆ) வெண்கலம், பொன்

இ) தாமிரம், வெள்ளி ஈ) தங்கம், வெள்ளி

***ஆ) பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி :*** *5*

இந்திய நாட்டில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்ந்து உணவுக்கு வழியின்றி விழிப்பவர்கள் ஏராளம். அதிலும் இளமையில் வறுமை என்பது மிகக்கொடியது. இளமையில் வறுமைத்துன்பத்தால் உண்ணக்கூட சரியான உணவின்றி அல்லற்படும் பள்ளிப் பிள்ளைகளுக்காகக் கொண்டுவரப்பட்டது சத்துணவுத் திட்டம். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என மணிமேகலையும் மொழிகிறது. இத்திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களால் 01-11-1982 ல் கொண்டு வரப்பட்டது. "பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்" என்பது பழமொழி. சிற்றூர்களில் வறுமையால் தம் பிள்ளைகளை ஆடு, மாடு மேய்க்க அனுப்பிவிடுகிறார்கள். ஆகவே அவர்கள் பசிப்பிணி நீங்கிப் படிப்பறிவு பெற்று நாட்டுக்கு நற்பயன் அளிப்பதற்கு இந்தச் சத்துணவுச்சட்டம் முயலுகிறது.

இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஓர் ஆண்டிற்கு நூறு கோடி ரூபாய்க்கு மேல் செலவாகிறது. பள்ளிகளிலும், பள்ளிக்கு அருகிலும் சத்துணவுக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தற்போது இத்திட்டத்தால் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு உணவு கிடைக்கிறது. இத்திட்டத்தால் பல மாணவ மாணவிகள் பெரிதும் பயனடைகிறார்கள். இத்திட்டம் மிகவும் வெற்றிகரமாக நடைமுறையில் இருக்கிறது.

**வினாக்கள் :**

i. *வாழ்க்கையில் எது மிகவும் கொடியது ?*

அ) வறுமையின்மை ஆ) கல்வியின்மை இ) துன்பம் ஈ) வறுமை

ii. *சத்துணவுத் திட்டம் எவ்வாண்டு கொண்டு வரப்பட்டது ?*

அ) 1972 ஆ) 1982 இ) 1962 ஈ) 1992

iii. *சத்துணவுத் திட்டத்தினால் அரசுக்கு ஓராண்டிற்கு எவ்வளவு ரூபாய்க்கு மேல் செலவாகிறது?*

அ) ஐம்பது கோடி ரூபாய் ஆ) நூற்றியைம்பது கோடி ரூபாய்
இ) இருநூறு கோடி ரூபாய் ஈ) நூறு கோடி ரூபாய்

iv. *'பசி வந்திட' எனத் தொடங்கும் பழமொழியை எழுதுக.*

அ) 'இளமையில் கொடுமை பசிப்பிணி'
ஆ) 'பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்'
இ) 'பசி போல் கொடிய நோய் வேறெதுவுமில்லை'
ஈ) 'பசிப் பிணி பொல்லா நோய்'

v. *சத்துணவுத் திட்டத்தினால் பயன் அடைபவர் யார் ?*

அ) பள்ளி மாணவ மாணவியர்

ஆ) பள்ளி சிறார் மட்டும்

இ) கல்லூரி மாணவ மாணவியர்

ஈ) பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்

**2. கொடுக்கப்பட்ட பத்தியைப் படித்து, சுருக்கி எழுதுக :** 5

நாடுகளிடையே நட்புறவு, நல்லெண்ணம், விளையாட்டார்வம் முதலியவற்றை வளர்க்கவும் விளையாட்டு, உடற்பயிற்சி, ஊக்கம், உழைப்பு, உயர்வு ஆகியவற்றை உலக அளவிலும், ஆசிய அளவிலும் வளர்க்க நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைமுறைப்படுத்தி வருகிறது ஆசிய விளையாட்டுப்போட்டிக் கழகம்.

1945 ஆம் ஆண்டு தில்லியில் நடந்த ஆசிய நாடுகள் உறவு மாநாட்டில் இந்திய ஒலிம்பிக் சங்கச் செயலாளராகத் திகழ்ந்த பாட்டியாலா இளவரசர் சோந்தி ஆசிய விளையாட்டுப் போட்டி நடத்துவதற்குரிய கருத்தை வெளியிட்டார். மறைந்த இந்தியப் பிரதம மந்திரி நேரு அவர்கள் அதற்கு ஊக்கமளித்து 1951ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டியைத் தில்லியில் தொடங்கினார். அதில் 11 ஆசிய நாடுகள் பங்கேற்றன. 489 விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர். ஆறுவகை விளையாட்டுகள் நிகழ்வுற்றன. அடுத்து முறையே மணிலா, டோக்கியோ, ஜகர்த்தா, பாங்காக், டெக்கரான், மீண்டும் தில்லி ஆகிய இடங்களில் நடைபெற்றன. ஒவ்வொரு ஆசிய விளையபட்டுப் போட்டியிலும் விளையாட்டுகளின் எண்ணிக்கை கூடிக்கொண்டே சென்றது.

ஆசிய விளையாட்டு விழா ஆசிய நாடுகள் அனைத்தும் ஆசிய அளவில் விளையாட்டுத் திறம் பெற்றபின் உலக அளவில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளிலும் வெற்றியடையப் பயிற்சி அளிக்கிறது. விளையாட்டுப் போட்டிகளைக் காணும் இலட்சக்கணக்கானோர்

விளையாட்டுகளில் ஆர்வமும், மகிழ்ச்சியும் பெற்று வாழ்வில் வளம் பல எய்துகிறார்கள்.

## பிரிவு - ஆ

## *எழுதுதல் - மதிப்பெண் : 14*

**3. கடிதம் வரைக : 6**

மாநில அளவில் நடைபெற்ற பேச்சுப்போட்டியில் முதற்பரிசு பெற்ற உன் நண்பனுக்கு ஒரு பாராட்டுக் கடிதம் வரைக.

**அல்லது**

அரசிற்குச் சொந்தமான நிலத்தில் பூங்கா அமைத்துத் தரும்படி மாநகராட்சித் தலைவருக்குக் கடிதம் எழுதுக.

(இரண்டு கடிதங்களிலும் உனது முகவரி : தமிழரசன்/கயல்விழி, 25.தமிழீழவன் குடியிருப்பு, பிரபாகரன் நகர், திருநெல்வேலி எனக் கொள்க.)

**4. ஏதேனும் ஒரு பகுதியிலுள்ள குறிப்புகளைக் கொண்டு ஒரு கட்டுரை எழுதுக : 8**

அ) முன்னுரை - பெண்களின் அன்றைய நிலைமை - சம உரிமை இல்லாமை - கல்வியுரிமை - சொத்துரிமை - படித்த பெண் - இன்றைய நிலைமை - தேவையான செயல்கள் - முடிவுரை.

ஆ) முன்னுரை - புவி வெப்பமயமாதல் என்றால் என்ன ? - பூமி வெப்பமடையக்காரணம் - கடல் மட்டம் உயர்தல் - காடுகளின் அழிவு - தண்ணீர்த் தட்டுப்பாடு - செய்ய வேண்டுவன - முடிவுரை.

இ) முன்னுரை - நிலையற்ற செல்வம் - சேமிப்பின் அவசியம் - பல்வகைச் சேமிப்புத் திட்டங்கள் - மாணவர் சேமிப்புத் திட்டம் - முடிவுரை.

# பிரிவு - இ

## *இலக்கணம் - மதிப்பெண் : 15*

**5. இலக்கணம்**

**அ) எடுத்துக்காட்டுகள் தருக :** 3

i. வஞ்சப்புகழ்ச்சி அணி

(அ) அஞ்சியேன் என்றவன் தன்ஊருரைத்தான் யானுமவன்
வஞ்சியான் என்பதனால் வாய்நேர்ந்தேன்

(ஆ) தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுகலான்.

(இ) ஆவலுடன் பாவலரும் ஆறுகால் வண்டினமும்
காவலரைச் சூழுங் கலை சையே.

(ஈ) ஆக்கம் அதர் வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை.

ii. புளிமா

அ) களிறு ஆ) களிப்புடன் இ) வினா ஈ) தேடு

iii. உழிஞைத் திணை

அ) மாற்றரசனோடு போரிடல் ஆ) மதிலை வளைத்தல்
இ) மதிலைக் காத்தல் ஈ) வெற்றி பெறுதல்

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக :** 3

i. அகவல் ஓசை பெற்று வருவது ------------- ஆகும்.

அ) குறள் வெண்பா ஆ) கலிப்பா இ) நேரிசை வெண்பா
ஈ) ஆசிரியப்பா

ii. செய்யுளில் ஒரே சொல் பிரிவுபடாமல் நின்று பலபொருள் தருவது -------- .

அ) வஞ்சப்புகழ்ச்சி அணி ஆ) பிறிமொழிச் சிலேடை
இ) பின்வருநிலை அணி ஈ) செம்மொழிச் சிலேடை

iii. காய்முன் நிரை வருவது -------------- தளையாகும்.

அ) இயற்சீர் வெண்டளை ஆ) நிரையொன்றாசிரியத் தளை
இ) வஞ்சித்தளை ஈ) கலித்தளை

**இ) கூறியவாறு செய்க :** 3

i. கண் (ஈரசைச் சீராக்குக)

அ) கண்கள் ஆ) கணி இ) காண் ஈ) காணாமல்

ii. 'சென்று' - என்பது வெண்பாவின் ஈற்றடியின் ஈற்றுச்சீராயின் அதன் வாய்பாடு

அ) நாள் ஆ) மலர் இ) காசு ஈ) பிறப்பு

iii. பாலை (சிறுபொழுது எழுதுக)

அ) நண்பகல் ஆ) மாலை இ) யாமம் ஈ) எற்பாடு

**ஈ) இலக்கணக் குறிப்புத் தருக :** 3

i. மூதூர்

அ) அடியகரம் ஐயாதல் ஆ) ஆதி நீடல் இ) தன்னொற்றிரட்டல்
ஈ) முன்னின்ற மெய் திரிதல்

ii. வந்தனன் வென்றான்

அ) குறிப்பு வினையெச்சம் ஆ) தெரிநிலை வினையெச்சம்
இ) முற்றெச்சம் ஈ) வினைமுற்று

iii. தாமுள வாக்கலும்

அ) மாமுன் நேர் ஆ) விளமுன் நேர்

இ) காய்முன் நேர் ஈ) கனிமுன் நேர்

**உ) சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க :** 3

i. அ) வெண்பாவின் இலக்கணத்துடன் இரண்டடிகளில் வருவது இன்னிசை வெண்பா.

ஆ) வெண்பாவின் இலக்கணத்துடன் இரண்டடிகளில் வருவது வஞ்சிப்பா.

இ) வெண்பாவின் இலக்கணத்துடன் இரண்டடிகளில் வருவது குறள் வெண்பா.

ஈ) வெண்பாவின் இலக்கணத்துடன் இரண்டடிகளில் வருவது கலிப்பா.

ii. அ) வினாவிற்கு வினாவாகவே விடைகூறுவது உறுவது கூறல் விடை.

ஆ) வினாவிற்கு வினாவாகவே விடைகூறுவது இனமொழி விடை.

இ) வினாவிற்கு வினாவாகவே விடைகூறுவது ஏவல் விடை.

ஈ) வினாவிற்கு வினாவாகவே விடைகூறுவது எதிர் வினாதல் விடை.

iii. அ) ஆய்தக் குறுக்கத்தில் வருமொழியிலுள்ள தகரம் நிலைமொழிக்கேற்ப டகரமாகிப் புணரும்.

ஆ) ஔகாரக் குறுக்கத்தில் வருமொழியிலுள்ள தகரம் நிலைமொழிக்கேற்ப டகரமாகிப் புணரும்.

இ) மகரக் குறுக்கத்தில் வருமொழியிலுள்ள தகரம் நிலைமொழிக்கேற்ப டகரமாகிப் புணரும்.

ஈ) ஐகாரக் குறுக்கத்தில் வருமொழியிலுள்ள தகரம் நிலைமொழிக்கேற்ப டகரமாகிப் புணரும்.

## பிரிவு - ஈ

## இலக்கியம்/ உரைநடை - மதிப்பெண் : 36

**6. பின்வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும் :** 5

இல்வாழ்க்கை வாழ்வோர்க்கும் பொருள் தேடுவது ஒரு கடமையாக இருக்கிறது. அதற்காக அவர்கள் பற்பல தொழில் வகைகளை மேற்கொண்டிருந்தார்கள். உழவு, வணிகம், நெசவு முதலியவை அத்தொழில் வகைகளில் சில. இங்கே மலைகளும் காடுகளும் கடற்கரைகளும் வளமாக இருக்கின்றன. வெற்று வெளிகளும் உண்டு. அங்கங்கே இருந்த மக்கள் அவ்வவ்விடங்களுக்குத் தக்க தொழில்முறைமைகளை உன்னித்துப் பார்த்துத் தெரிந்து கொண்டார்கள். மலைப்பக்கங்களில் இருப்பவர்கள் தேனெடுப்பது, தினை விதைப்பது, கிழங்கு அகழ்வது முதலிய தொழில்களையும் வயலிடங்களில் இருப்பவர்கள் உழவு செய்வது, நகரமைப்பது, ஆட்சி புரிவது முதலிய தொழில்களையும் கடற்கரைகளில் இருப்பவர்கள் முத்துக் குளிப்பது, உப்பு விளைப்பது, மரக்கலத்திலேறி அலைகடலிற் சென்று வாணிகஞ் செய்வது முதலிய தொழில்களையும் செய்து பொருள் தேடி வந்தார்கள். அறிவு முதிர முதிர இன்னும் எத்தனையோ வகையான தொழில்களை உணர்ந்து, வளம் மிகுந்து வாழ்ந்தனர்.

**வினாக்கள் :**

i. *இல்வாழ்க்கை வாழ்வார்க்கு எது ஒரு கடமையாக உள்ளது ?*
ii. *பொருள் தேட மக்கள் என்ன செய்தார்கள் ?*
iii. *தொழில் வகைகள் யாவை ?*
iv. *மக்கள் எப்படி தொழில் கற்றுக் கொண்டார்கள்?*
v. *வயலிடங்களில் இருப்பவர்கள் எத்தொழில் செய்தார்கள் ?*

**7. பின்வரும் செய்யுள் வரிகளைப் படித்து வினாக்களுக்கு விடையளி : 4**

*"எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்*
*புள்ளுறு புன்கண் தீர்த்தோன்"*

**விடையளி :**

*i. இப்பாடல் இடம் பெற்ற நூல்*

அ) புறநானூறு

ஆ) கம்பராமாயணம்

இ) பெரிய புராணம்

ஈ) சிலப்பதிகாரம்

*ii. இப்பாடல் இடம் பெற்ற காண்டம்*

அ) மதுரைக் காண்டம்

ஆ) வஞ்சிக் காண்டம்

இ) புகார்க் காண்டம்

ஈ) சிலம்புக் காண்டம்

*iii. புள்ளுறு புன்கண் தீர்த்தவன்*

அ) கோவலன்

ஆ) சிபி

இ) மனுநீதிச் சோழன்

ஈ) மாசாத்துவான்

*iv. 'இமையவர்' என்போர்*

அ) சேரர்

ஆ) சோழர்

இ) பாண்டியர்

ஈ) தேவர்

**8. பின்வரும் குறட்பாக்களில் விடுபட்ட சொற்களை நிரப்புக : 4x1/2=2**

i. ---------------- படுபாக் கறிந்து.

ii. செறுநரைக் காணின் --------------

iii. தம்மிற் --------------- தமரா

iv. ------------- அன்போடும் வாராப் பொருளாக்கம்

**9. ஏதேனும் இரண்டு செய்யுள் வினாக்களுக்கு மட்டும் விடையளி : 8**

i. பெரியாரைத் துணைக்கோடல் பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

ii. குகனுக்கும் இராமனுக்கும் இடையே நடைபெற்ற உரையாடலைத் தொகுத்தெழுதுக.

iii. வாழ்க்கையில் அனைவரும் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் குறித்துக் கலித்தொகைப் பாடல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

iv. அப்பூதியடிகளார் இல்லத்தில் நிகழ்ந்ததனை விவரிக்க.

**10. ஏதேனும் இரண்டு உரைநடை வினாக்களுக்கு மட்டும் விடையளி : 10**

i. இராமலிங்கரின் உயிரிரக்கம் பற்றிய கருத்துகளைத் தொகுக்க.

ii. அம்பேத்கர் உருவாக்க நினைத்த இந்தியா எது ?

iii. மேடைப்பேச்சின் கூறுகளை விளக்குக.

iv. தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி குறித்து விரிவாக எழுதுக.

v. பெண் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளனவாகப் பெரியார் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

**11. ஏதேனும் ஒரு துணைப்பாடப் பகுதிக்கு விரிவாக விடையளி : 7**

i. குறட்டைஒலி - கதையை விளக்கி எழுதுக.

ii. அண்ணா எழுதிய கடிதத்தின் கருத்துகளைச் சுருக்கி எழுதுக.

iii. தமிழகத்தில் நூலகத் துறையின் வளர்ச்சி பற்றிக் கட்டுரையாக எழுதுக.

♫♫♫♫♫♫ ☺ ♫♫♫♫♫♫